# விலைமனுக்களுக்கான அழைப்பு

## Design, Supply , Installation, Commission and Maintenance of 1.3 MW roof Mounted grid tied solar power system at University Hospital

## Contract No.: MOD/KDU/06/2020

01. மேலேயுள்ள வேலைகளுக்காக இலங்கை, இரத்மலான, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து (இலங்கையிலிருந்து மாத்திரம்) கோருகின்றார். விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

02. 2021.08.09 ஆம் திகதியிலிருந்து 2021.08.31 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத 50,000 இலங்கை ரூபாவை (ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவை) இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சின் Iஆம் பிரதான நிதியிடல் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் 03 ஆம் இலக்க சட்டத்தின் கீழான பதிவு செய்தல் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர் (உரித்தான வேளையில் விலைமனுவைச் சமர்ப்பிக்கும் வேளையில்)

03. தகுதியுள்ள விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை அளவுத்திறனுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

அ. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் ICTAD/CIDA பதிவு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| தகுதித்தன்மை | தரம் |
|---|---|
| மின்னியல், தீயிலிருந்து பாதுகாப்பு மற்றும் கண்டுபிடித்தல் முறைமைகள் | ஈஎம் 4 அல்லது மேற்பட்டது |

ஆ. கடந்த 5 வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வருடாந்த சராசரி வேலையின் அளவு ஆகக் குறைந்தது 500 மில்லியனாக இருத்தல் வேண்டும் (500 மில்லியன் இலங்கை ரூபாவில்)

இ. தேறிய ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகள் மற்றும் பிரத்தியேகமாக இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட வேறேதாவது முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகள் 70 மில்லியன் இலங்கை ரூபாவாவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஈ. Experience as a Design, supply , installation commission and maintenanace of 1.3 MW or similar complexity roof mounted grid tied solar power system with Fire Detection and Protection system. கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு விடேத்துவத்திலும் ஆகக் குறைந்தது ஒரு பூர்த்தியாக்கப்பட்ட செயற்றிட்டம்.

உ. வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு அமைச்சு தலைமையக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சுப் பணிமனை, பிரதான நிதியிடல் அலுவலர் I இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி 011-2390719. தொலைநகல்: 0112-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk).

05. மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு அமைச்சு தலைமையக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சுப் பணிமனை, பிரதான நிதியிடல் அலுவலர் I இடமிருந்து பெற்று மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். procurement@defence.lk).

06. 2021.08.17 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு இரத்மலான, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டம் போலவே தள விஜயத்திற்கான ஏற்பாடும் ஒழுங்கு செய்யப்படும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு பங்கு பெறுவதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அவர்களின் விபரங்களை (பெயர், தேஅஅ இலக்கம், கம்பனி மற்றும் பணி) ஆகியவற்றை சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், த.பெ. 32, இரத்மலான, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் (தொலைபேசி: 2632430. தொலைநகல் .....)

07. விலைமனுக்கள் 2021.09.01 ஆம் திகதியிலிருந்து 2022.01.01 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து 120 நாட்கள்)

08. அனைத்து விலைமனுக்களும் இருபத்தைந்து இலட்சம் (2,500,000) இலங்கை ரூபா பெறுமதியானதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கை செயற்படுவதுமான வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக் கூடியதுமான வகையில் 2021.09.01 ஆம் திகதியிலிருந்து 2022.02.01 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான (விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மூடும் திகதியிலிருந்து 120 நாட்கள்)அமைந்துள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (விலைமனுப்பிணையின் பயனாளி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகும்)

09. கீழே பட்டியலிட்டவாறு மூலப்பிரதிகள் மற்றும் நகல்பிரதிகள் ஆகிய விலைமனுக்கள் 'தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமை அலுவலக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

| தபாலுறைகள் | தேவைப்பாடு |
|---|---|
| தபாலுறை 01 மற்றும் தபாலுறை 03 | மூலப்பிரதி மற்றும் 1 நகல்பிரதி |
| தபாலுறை 02 | மூலப்பிரதி மற்றும் 1 நகல்பிரதி |

10. நிர்மாணக் காலப்பகுதியானது 180 நாட்காட்டி நாட்களாகும்.

11. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது 2021.09.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். பெறுகைக் கிளை, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, இலங்கை. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

12. விலைமனுக்கோல் ஆவணத்தை கொள்வனவு செய்ய முன்னராக, தேவையான வேளையில் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவு சான்றிதழை சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

13. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

14. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனுக்களை திறக்கும் வேளையில் பங்குபெறவுள்ளவர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு ஆகியவற்றின் விபரங்களை இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியிடல் அலுவலர் (I) ஒன்றிற்கு தொலைபேசி:0112439381, தொலைநகல்: 011-2390720, மின்னஞ்சல்:procurement@defence.lk எழுத்து மூலமாக றிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும், உரித்தான பெறுகை தொடர்பாக எந்தவொரு உத்தியோகபூர்வ வகையில் பங்குபெறவுள்ள தனிநபரின் பெயர், தேஅஅ/கடவுச்சீட்டு ஆகியவற்றின் விபரங்களை எழுத்து மூலமாக இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் I ஆம் இலக்க பிரதான நிதியிடல் அலுவலருக்கு அறிவிக்குமாறு அறிவுரைப்படுத்துகின்றனர்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.**